<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 97/2022** நாள்: **23.06.2025** ம.சா.2 – ராஜலிங்கம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

என்னை சாட்சியம் அளிப்பதற்கு மனுதாரரின் வழக்கறிஞர் தான் அழைத்தார். மனுதாரர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. காவல் துறையினர் என்னை வழக்கு விபத்து சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விபத்து தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. குற்ற இறுதியறிக்கையில் என்னுடைய பெயர் விபத்தை நேரடியாக பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரர் கூறியதை வைத்து விபத்தை தெரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் போது நான் ஆல்ட்டோ காரின் தென்புறம் நின்று கொண்டிருந்ததால் வடபுறம் நடந்த விபத்தை நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனவே காரின் கதவில் மோதி மனுதாரர் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

சரஸ்வதியின் மகன் விபத்தில் காயமடைந்து இறந்துவிட்டார். அதற்கு இழப்பீடு கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பாக எத்தனை வழக்குகள் இந்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் தெரியாது. ரயில்வே ஸ்டேசன் அருகில் நடைபயிற்சி மேற்கொள்ளும் போது மனுதாரர் அங்கு கடை வைத்துள்ள விவரம் தெரியும். மனுவாதியின் கடைக்கு சென்று வரும் வகையிலும் அவரை தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம்

அளிக்க அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கூறியதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சம்பவத்தை நேரடியாக பார்த்ததால் தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் சாலையின் தென்புறம் நின்று கொண்டிருந்தேன். நான் நின்று கொண்டிருந்த இடத்தின் நேர் வடபுறம் விபத்து நடைபெற்றது. கார் அருகில் உள்ள தென்புற சந்தில் இருந்து வடக்கு நோக்கி வந்து, உடுமலை – பழனி சாலையில் மேற்கு நோக்கி நின்றது. மேற்படி சாலை அகலமானது தான். அந்த சாலையில் 4 கனரக வாகனங்கள் ஒரு சேர செல்லமுடியுமா என்றால் முடியாது. விபத்தில் சம்பந்தப்பட்ட லாரி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. லாரி இடது புறம் இருக்ககூடிய நபர்கள், பொருட்கள் ஆகியவைகளுக்கு சேதம் ஏற்படாத அளவிற்கு இடைவெளி விட்டு வந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி மையத்தடுப்பு உள்ள பகுதிதான் என்றும், மனுதாரருக்கு ஆதரவாக சம்பவ சாலை சிறிய சாலை என்று உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கார் கதவை அதன் ஓட்டுநர் திறந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்றால் மனுவாதியின் மகன் மீது லாரியின் முன் சக்கரம் ஏறிவிட்டது. விபத்திற்கு பிறகு ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் இந்நீதிமன்றத்திற்கு இன்று 3வது முறையாக சாட்சியம் அளிப்பதற்கு வந்துள்ளேன். விபத்தை நேரடியாக பார்க்காமல், மனுதாரருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM
Digitally signed by C RAJALINGOM
Date: 2025.06.23 16:35:04 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.